[5th February 1966

யாரிடத்தில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்களை அழைத்துக் கொடுத்தால் அவர்கள் மூலம் அதிகாரிகளிடத்தில் கொடுக்கப்படு கிறது. பின்னல் கவர்னர் உரை விவாதத்திற்கு விடை அளிக்கும் போது இதைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொல்லு கிறேன்.

பத்திரிகைகள் மீது நடவடிக்கை

*110. கேள்வி.—திரு. செ. மாதவன் : திரு. மு. கருணாநிதி : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஷ்மீர் பிரச்சினை பற்றியும், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவு பற்றியும் கருத்துக்கள் வெளியிட்ட பத்திரிகைகள் எவை மீதாவது பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Sri T. Sadasivam, Editor, Printer and Publisher of the Tamil Weekly 'Kalki' and Printer and Publisher of the English Weekly 'Swarajya', and Sri Pothan Joseph, Editor of 'Swarajya' were prosecuted for the publication of a prejudicial cartoon and articles in certain issues of 'Kalki' and 'Swarajya'. The prosecutions in these two cases were withdrawn on a reconsideration of the position at the instance of Sri C. Rajagopalachariar.

திரு. செ. மாதவன் : இந்தப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டது. ஆனல் மற்றப் பத்திரிகைகள் மீது வழக்குகள் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்காமல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் அந்தப் பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருப்பதுதான். நாங்கள் அந்தப் பத்திரிகைச் சொந்தக்காரர்களையும், ஆசிரியர்களையும் கேட்டிருக்கிறோம்; அவர்கள் எந்த நிலையில் இதை வாபஸ் பெற முடியும் என்று கேட்டிருக்கிறோம். மேற்கொண்டு அவர்கள் முன் வந்தால் அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. எஸ். முருகையன் : இந்த இரு பத்திரிகைகள் மீது வழக்கு போடப்பட்ட பிறகு அது பற்றிப் பரிசீலனை செய்யப் பட்டதா ? பரிசீலனை செய்து முடிவதற்குள் அது கைவிடப்பட்டதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழக்கு தகுந்த காரணத் தோடுதான் போடப்பட்டது. அதற்குப் பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு வழக்கை மேற்கொண்டு தொடர வேண்டிய அவசியம் இல்லையென்று அரசாங்கம் கருதியதால் வாபஸ் பெறப்பட்டது.

5th February 1966]

திரு. செ. மாதவன் : கனம் ராஜாஜி அவர்கள் எழுதிய கடிதத்தில் 'ரீ கன்ஸிடர்' என்று போட்டிருக்கிறார்கள். 'சுவராஜ்யா', 'கல்கி' பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்ட கருத் 9-00 a.m.
துக்கள் அவருடைய சொந்தக் கருத்துக்கள் என்று மீண்டும் வலியுறுத்தி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிடப்பட்டும் வாபஸ் வாங்கக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராஜாஜி அவர்கள் எழுதிய கடிதம் அதற்கு முன்பு இருந்த நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. அரசாங்கம் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்த பிறகு இதை மீண்டும் தொடர்ந்து நடத்தவேண்டியதில்லை என்று நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சுவராஜ்யா, கல்கி பத்திரிகைகளின் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கியதற்குப் பிறகு மற்ற பத்திரிகைகளை நடத்தும் ஆசிரியர்களை அழைத்து நீங்கள் இப்படித்தான் செய்திகளை வெளியிடவேண்டும், அரசாங்கத்தோடு நீங்கள் ஒத்துழைக்கவேண்டும் என்ற முறையில், வற்புறுத்துகிற முறையில் முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பத்திரிகைகளிடத்தில் உறுதிமொழி கேட்டார்களா அல்லது வேறு எந்தவிதமான உறுதிமொழி கேட்டார்கள் என்று தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பத்திரிகைகள் மீது தொடர்ந்த வழக்கு ஒன்று ; மற்றப் பத்திரிகைகள் மீது தொடரப்பட்ட வழக்குகள் வேறு விஷயம், அது வேறு பிரச்னை. அந்தந்தப் பத்திரிகைக்காரர்கள் சில மாதங்களுக்கு முன்பே என்னிடம் வந்து பேசியபோது அவர்களிடம் நான் எந்த நிலையில் இதை மீண்டும் பரிசீலனை செய்து இதை வாபஸ் பெறமுடியும் என்று தெரிவித்திருக்கிறேன். அவர்களும் அவ்வாறு நடந்து கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் நடந்து கொள்ளவில்லை.

திரு. ம. கமலநாதன் : நம் முதல் அமைச்சர் அவர்கள் ராஜாஜி அவர்களின் இல்லத்திற்குச் சென்று இதுபற்றி விளக்கம் ஏதாவது கேட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் ஒன்றும் கேட்கவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : 'மாலை முரசு' நிர்வாகம் தங்கப்பத்திரத்திற்குக்கூட தங்கம் கொடுத்ததாகப் பத்திரிகையில் படித்தேன். இந்த மாதிரி தேசத்திற்காக வேண்டி ஒத்துழைப்பு கொடுப்பதற்கு முன்வந்திருக்கிற காரணத்தினால் அதன் மீதுள்ள நடவடிக்கைகளை வாபஸ் பெற பரிசீலனை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தங்கப் பத்திரத்திற்குக் கொடுக்கலாம், நிதி கொடுக்கலாம் அது வேறு விஷயம். ஆனால் ஆட்சேபகரமாக எழுதினால், பிரசுரித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

[5th February 1966

திரு. செ. மாதவன் : கல்கி, சுவராஜ்யா இந்த இரண்டு பத்திரிகைகளின் மீது நடவடிக்கைகள் எடுத்தவுடன் மத்திய அரசாங்கம் அதுபற்றி நம் மாநில அரசாங்கத்தினிடம் ஏதாவது கேட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் இதைச் செய்யவேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் அவ்வாறு தலையிடவும் மாட்டார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ராஜாஜி அவர்கள் வீட்டுக்கு முதல் அமைச்சர் அவர்கள் செல்லவில்லை என்று சொன்னார்கள். ஆனால் ராஜாஜி அவர்களின் இல்லத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் போனதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஆனால், வேறு விஷயங்கள் பற்றிப் பேசியிருக்கலாம், அப்படித்தானே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படித்தானே, இப்படித்தானே என்று தெரியாது. ராஜாஜி அவர்களை நான் ஒன்றும் கேட்கவில்லை என்று சொன்னேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்கி, சுவராஜ்யா பத்திரிகைகளின் மீது போடப்பட்ட வழக்குகள் ஏதாவது நிபந்தனையின் பேரில் வாபஸ் வாங்கப் பட்டனவா ? அவற்றை வாபஸ் பெறுவதற்கு நிபந்தனை ஏதாவது விதிக்கப்பட்டதா இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராஜாஜி அவர்கள் கடிதம் எழுதிய பிறகு அதை ஆராய்ந்து இனி இதைத் தொடர்ந்து நடத்த வேண்டியதில்லை என்ற கருத்து ஏற்பட்டு அவ்வாறு வாபஸ் வாங்கிக் கொண்டோம்.

திரு. எஸ். முருகையன் : இது சம்பந்தமாக ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைக் காண விரும்பினாரா அல்லது முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய விளக்கத்தைப் பெற அவர்கள் வீட்டிற்குச் சென்றார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராஜாஜி அவர்கள் என்னைக் காண விரும்பியது உண்மைதான். ராஜாஜி அவர்களை நான் சந்தித்துப் பேசியதும் உண்மைதான். இதைச் செய்யவேண்டும், அதை செய்யவேண்டும் என்று நானும் கேட்கவில்லை, அவரும் கேட்கவில்லை.

அனல் மின்சாரத் திட்டம்

* 111. கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. கே. மாதா கவுடர் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்திற்குத் திட்டக் குழுவும் மத்திய அரசும் அனுமதி அளித்துவிட்டார்களா ?

(இ) அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?